விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 2 ரஜப் 28 இதழ்: 4
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14-2-1991

## திருமலை எண்ணெ குதங்களை இந்தியா கையேற்றுள்ளது

(திருமலை)
திருமலை துறைமுகத்திற்கு அருகிலுள்ள பதினெரு 'எண்ணெத் தாங்கி குதங்களை' இந்தியா கையேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. வி. சி. சுக்ளா இது தொடர்பாக இலங்கை அரசுடன் முக்கிய பேச்சுக்களை நடாத்தியிருந்தார்.

பழைய கசப்புணர்வுகளை மறந்து தற்போது இந்தியாவும் இலங்கையும் அந்தந்த நாட்டு உள் விவகாரங்களில் தலையிடாது புரிந்துணர்வுடன் நடந்து கொள்வதெனவும் திரு. சுக்ளாவின் விஜயத்தின்போது முடிவெடுக்கப்பட்டதாம். (சி)

## 16ந் திகதி மாநாட்டில் ஜனதிபதி முக்கிய முடிவு?

(கொழும்பு)
கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களும், முஸ்லிம் கட்சிகளும் சமர்ப்பித்த ஆலோசனையின் அடிப்படையில் வடக்கு-கிழக்கு பிரச்சனையை அனைத்துக்கட்சி மாநாடு மூலம் தீர்க்க

(4-ம் பக்கம் பார்க்க)

பாக்தாத் மீது

# அகோர விமானத் தாக்குதல்: ஆயிரம் ஈராக்கிய மக்கள் பலி!

## சிறுவர், சிறுமியரே அதிகம்

(பாக்தாத்)
ஈராக் தலைநகர் பாக்தாத்தில் பொது மக்கள் நிலை ஒன்றின் மீது பந்நாட்டு படை விமானங்கள் மேற்கொண்ட அகோர குண்டுத் தாக்குதலில் 1000 பேர் கொல்லப்பட்டனர். பெருமளவில் சிறுவர், சிறுமியரே கொல்லப்பட்டனர். இத்தாக்குதலை பல நாடுகளும் வன்மையாக கண்டித்துள்ளன.

தலைநகரில் பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த இரண்டு பதுங்குகுழிகள் மீது விமானத் தாக்குதலை மேற்கொண்ட போதே இவர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான சடலங்கள் கருகிய நிலையில் காணப்படுகின்றன.

இக்கோரச் சம்பவத்தைப் பந்நாட்டுப் பத்திரிகையாளர்களும் சென்று பார்வையிட்டனர். கொல்லப்பட்டவர்களில் பலர் ஒரே குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், குழந்தைகள், சிறுவர், சிறுமியரே

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா, முல்லைத்தீவில் கடும் யுத்தம் தொடர்கிறது

(வவுனியா)
வவுனியா-முல்லைத்தீவு பகுதிகளில் கடந்த இரு நாட்களுக்கு மேலாக கடும் யுத்தம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வவுனியா தாண்டிக்குளம்

(4ம் பக்கம் பார்க்க)

## 35 இராணுவத்தினர் பலி 100 படையினர் காயம்

[கொழும்பு]
வவுனியா பகுதியில் இடம்பெற்றுவரும் கடும் யுத்தத்தில் இராணுவத் தரப்பில் 35 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும், நூறு பேர் வரை படுகாயமடைந்துமுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை இரு உயர் அதிகாரிகள் உட்பட 18 இரா

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக ஆளுநர் பர்னலா ராஜினமா

(சென்னை)
தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னலா தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார். பதவி விலகல் கடிதத்தை ஜனதிபதியிடம் நேற்று அவர் ஒப்படைத்தார்.

தமிழக அரசு கலைக்கப்பட்டதையும், ஆளுநருக்குக் களங்கம் ஏற்படும் விதத்தில் மத்

(2ம் பக்கம் பார்க்க)

## பின்வாங்கிய இராணுவம் நிலை தடுமாற்றம்

### காடு வெட்டும் பயணிகள்

(பூநகரி)
நொச்சிமோட்டைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கடும் மோதல் காரணமாக இராணுவம் பின்வாங்கி தாண்டிக்குளம் பகுதியில் முகாம் அமைப்பதற்கு பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட பயணிகளைக் கொண்டு காடுகளை வெட்டி துப்புரவு செய்துவருகின்றது.

எனினும் இப்பகுதியில் முகாம் அமைக்க முடியாத

(4ம் பக்கம் பார்க்க)

## 20 பொதுமக்கள் பலி

### 50 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
வவுனியா, நொச்சிமோட்டை, தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் 20-க்

(4-ம் பக்கம் பார்க்க)

## 48 மணிநேரத்தில் 20 படையினர் பலி

(திருமலை)
அம்பாறை, திருமலை, முல்லைத்தீவு மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் கடந்த 48 மணிநேரத்தில் இராணுவம், பொலிஸார் மீது மேற்கொண்ட கடும் தாக்குதல்களில் 20 படையினர் கொல்லப்பட்டும் 14 பேர் படுகாயமடைந்துமுள்ளதாக அரசு

(4-ம் பக்கம் பார்க்க)

## 400 தமிழர் இராணுவத்தால் கைது

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் 400 தமிழ் பொதுமக்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கோட்டைக்கல்லாறு நிலாவெளிக்கிடையிலேயே இவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவில் ஏற்பட்ட கடும் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுச் சலவைக்குச் சக்தி மிக்க மில்க்வைற் திரவ சவர்க்காரம் (Liquid Soap) விளக்கெரிக்கச் சுத்தமான வேப்பெண்ணெய் விற்பனையாகிறது. புலோலி ப. நோ. கூ. சங்கத்தில். மில்க்வைற்.
(சி-1094)

### சமூகக் கல்வி

விற்பனையாகின்றது! சமூகக் கல்வி-ஆண்டு:11 (புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன்:- நடராமபாலன். சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-4318)

### எண் ஜோதிடம்

கல்வி தொழில் குடும்ப வாழ்வு ஆகியவற்றில் முன்னேற்றமடைய உங்கள் பிறந்த ஆண்டு மாதம் திகதிக்கு ஏற்றவாறு பெயர் எண்ணை அமைத்துக் கொள்வதற்கு தொடர்பு கொள்ளவும் ஞாயிற்றுக்கிழமைகளில் பதிவு செய்தவர்கட்கு மட்டும் ஆலோசகர், லூடோ சாமென்ஸ், ஆஸ்பத்திரி வீதி, மளாய். (சி-4348)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# ஜூன் மாத இறுதியில் உள்ளூராட்சித் தேர்தல்

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல்களை எதிர்வரும் ஜூன் மாத இறுதிக்குள் நடாத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் ஆட்சி தேர்தல் தொடர்பாகதேர்தல் ஆணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டும் என்ற எதிர்கட்சியின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கானநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# படகில் வந்த பயணிகள் படையினரால் சோதனை

(புங்குடுதீவு)

நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் துறைமுகத்தை நோக்கிப் பெருந்தொகையான பயணிகளுடன் வந்த படகொன்று நயினாதீவில் முகாமிட்டிருக்கும் ஸ்ரீலங்கா கடற்படையினரால் என்றுமில்லாதவாறு தீவிர சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

மேற்படி படையினரின் தீவிர சோதனை வேட்டையின் போது அப்பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள 2 டசின் டோர்ச் லைட் பற்றறிகள் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

சுமார் நான்கு மணித்தியாலங்கள் முகாமில் மறிக்கப்பட்டு பின்னர் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. நடுக்கடலில் வந்துகொண்டிருக்கும்போது அப்பகுதிக் கடலில் ரோந்தில் ஈடுபட்டிருந்த பீரங்கிப் படகொன்று இடைமறித்துத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துப் படகைச் சில மணித்தியாலங்கள் கடலில் நிற்கும்படி கூறிவிட்டுச் செல்வதற்கு அனுமதித்தனர். (101)

### தமிழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திய அரசு நடந்து கொண்டதையும், தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி அமுலுக்குவந்ததையும் அடுத்தே திரு. பர்னாலா ராஜினாமாச் செய்தார்.

இவரது ராஜினாமாவைப் பல எதிர்க்கட்சிகளும் பாராட்டியுள்ளன. (சி)

## இராசி பலன்

14-02-1991

வியாழக்கிழமை

மேடம்: இனிய உறவு, தொழில் முன்னேற்றம், பெரியோர் ஆசி.

இடபம்: காரிய பலிதம். திருமணப் பேச்சு, குடும்ப மகிழ்ச்சி, தான தர்மம்

மிதுனம்:- போட்டி மனப்பான்மை, அதிகாரிகள்சினம். மன அமைதியின்மை.

கடகம்:- வீட்டில்தொல்லை, கடன் சுமை, உடல் உபாதை, வெறுப்பு.

சிங்கம்: புதிய முயற்சி, விகடப் பேச்சு, தொழில் பலிதம், தற்பெருமை.

கன்னி: நண்பர் தொல்லை. பயணங்களால் நன்மை, விருந்துபசாரம்.

துலாம்: பண்பற்ற செயல், குடும்பக் கவலை. காரியத் தடை. அலைச்சல்.

விருச்சிகம்: மறைமுகத் தொல்லை, அசதி. குடும்பக் கஷ்டம், பணச் செலவு.

தனுசு:- அதிகாரம். தான தர்மம், தொழில் லாபம், பொதுப்பணி.

மகரம்:- ஆடம்பரச்செலவு, குறைகேட்டல். இனசனப் பகை, தப்பபிப்பிராயம்.

கும்பம்:- தொழில்குறைவு, பெண்வழி உறவு, காரிய வெற்றி, பாராட்டு.

மீனம்:- குடும்பத்தில் குழப்பம், பணமுடை, எதிர்பாராத கஷ்டம், மனச்சுமை.

ஜோஸ்யர்

# இறுதிவரை ஈராக் போராட முடிவு!

[லண்டன்]

அமெரிக்காவினதும், அதனது நேசநாடுகளின் கொடூரமான ஆக்கிரமிப்பு யுத்த தாக்குதல்கள் எதனையும் எதிர்த்து இறுதிவரை போர்புரிவதற்கு ஈராக் என்றும் தயாராக உள்ளது என்று ஜனாதிபதி சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபந்தனைகள்வரையறைகளை மீறி அமெரிக்க நேசநாட்டுப்படைகள் செல்வதாக சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது. இதேவேளை ஈராக் படையின் புறமுதுகுகாட்டி ஓடமாட்டார்களென்றும், ஈராக் படையின் வல்லமையை இனிமேல்தான் உலகம் அறியப்போகிறதென் சோவியத் படைத் தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## காணவில்லை

1-ம் ஒழுங்கை, ஆனந்தம்வடலி ரோட், கொழும்புத்துறை குருசுமுத்து துரைராசா என்பவரது இரு ஆண் பிள்ளைகளாகிய அன்ரன் அமலதாஸ் (வயது 8), அன்ரன் யூட் (வயது 4) ஆகிய இருவரையும் 12-2-91 செவ்வாய்க்கிழமையிலிருந்து காணவில்லை. அன்றிலிருந்து இவர்களின் தாய் உணவின்றி கவலையோடு தவிக்கிறார்.

இவர்களைக் கண்டவர்கள் மேற்படி விலாசத்தில் அறியத் தந்தால் பெரும் உதவியாய் இருக்கும். சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:

கு. துரைராசா
(தந்தை)

(சி-4355)

## அறிவித்தல்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தியின் பெயரிலோ, அல்லது உபகரணங்களை வாங்கவோ பணம் சேகரிக்கும் உரிமையை வைத்தியசாலை ஊழியர்களுக்கோ, தனிப்பட்டவர்களுக்கோ நான் வழங்கவில்லை. இது சட்டவிரோதமுமாகும். விரும்புவோர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபையினூடாக அன்பளிப்பு செய்து பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுங்கள்.

சி. கதிரவேல்பிள்ளை
[டாக்டர் சி. கதிரவேல்பிள்ளை]
மாவட்ட வைத்திய அதிகாரி,
ஆதார வைத்தியசாலை,
பருத்தித்துறை.

[சி 4354]

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் க. விநாயகம்பிள்ளை

(தும்பளை, பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவரும் நீண்டகால ஆசிரியரும். முன்னாள் காவிறிச் மண்ட் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, வவுனியா மகாவித்தியாலயம் ஆகியவற்றின் ஆசிரியருமான அமரர் க. விநாயகம்பிள்ளை அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

ஹாட்லிக் கல்லூரி,
பழைய மாணவர் மன்றம்.

[சி-4953)

## 31ம்நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம்:
16-12-1942

★

மறைவு:
16-01-1991

அமரர்

### திருமதி சரோஜினிதேவி கிருஷ்ணசாமி (பூமணி)

கடந்த 16-01-91 அன்று காலஞ்சென்ற அமரர் திருமதி சரோஜினிதேவி கிருஷ்ணசாமி அவர்களின் நினைவஞ்சலியும், சபிண்டீகரணகிரியைகளும் 15-02-91 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்தும், மதிய போசனத்தில் பங்குகொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்,

கணவர், மக்கள், சகோதரர்கள்-
854, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4356)

## தமிழகத்தில் 260 முகாம்களில் 1,25,000 தமிழ் அகதிகள்

(சென்னை)

தமிழ்நாட்டில் 260 அகதி முகாம்களில் ஒன்றேகால் லட்சம் ஈழத்தமிழ் அகதிகள் தங்கியிருக்கிறார்கள் என்று உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுவரை ஈழத்தமிழ் அகதிகளுக்கு 16 கோடி 50 லட்சம் ரூபா செலவிடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அகதிமுகாம்களிலுள்ளவர்களுக்கு அரிசி, கோதுமை மா மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

அகதிகள் ஈழம் திரும்ப விருப்பம் தெரிவித்ததாகவும் ஆனால் இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்பட்ட பின்னரே அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்களென்றும் அகதிகளை நட்டாற்றில் கைவிடமுடியாதென்றும் அவர் கூறினார்.

## அனலைதீவில் உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு

(புங்குடுதீவு)

அனலைதீவுப் பகுதியில் உணவுப் பொருள்களுக்கு என்றும் இல்லாதவாறு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இங்குள்ள மக்கள் பெரும் பட்டினியை எதிர்நோக்கியுள்ளனர்.

மக்களுக்குச் சேவை செய்து வருவதாகக் கூறிக்கொண்டு அப்பகுதியிலுள்ள வியாபாரிகள் பொருள்களுக்குச் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அம்மக்களிடமிருந்து பணத்தைப் பெற்றுவருகிறார்கள். (101)

## அம்பாறை மகாவலி திட்ட 'சி' வலயத்தில் 10 ஆயிரம் சிங்களக்குடும்பம் குடியேற்றம்

(நேற்றைய தொடர்ச்சி)

தீகவாவியில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு அவற்றின் மணியோசை கேட்கும் இடமெல்லாம்சிங்கள பௌத்த மக்கள் வாழவேண்டுமென்ற அடிப்படையில் குடியேற்றப்பட்டார்கள். இதனால் தமிழ்பேசும் மக்கள் தமது நிலங்களை இழக்கவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

அம்பாறை மாவட்டத்தை 1980ம் ஆண்டு தேர்தல் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் திகாமடுல்ல தேர்தல்மாவட்டமாக பெயர்மாற்றம் செய்துள்ளார்கள்.

1971-ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி அம்பாறையின் மொத்த சனத்தொகை 2 லட்சத்து 72 ஆயிரத்து 605 பேர் ஆகும். அதில் சிங்களவர் 30 வீதம் ஆகும்.

### தமிழர்கள் வெளியேற்றம்

அம்பாறை - மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் எல்லைக் கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் 1977, 1981, 1983, 1985 இல் நடைபெற்ற இனக்கலவரங்களைத் தொடர்ந்து பெருமளவில் பாதிக்கப்பட்டு திட்டமிட்டு வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

1981-ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி அம்பாறையில் மொத்த சனத்தொகை 3 லட்சத்து 88 ஆயிரத்து 786 பேர் ஆகும். இதில் சிங்களவர் சனத்தொகை ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 371 பேர் ஆகும் மாவட்டத்தின் மொத்தசனத்

**அம்பாறை மாவட்டத்தில்**

**தமிழ்க் கிராமங்கள்**

**அழிக்கப்பட்டுள்ளன.**

**தமிழ் மக்கள்**

**கொல்லப்பட்டும்,**

**காயமடைந்தும்**

**அகதிகளாக காடுகளில்**

**தஞ்சமடைந்துள்ளனர்.**

தொகையில் சிங்களவரின் வீதம் 37 8% ஆகும்.

1981 ம் ஆண்டு அம்பாறையில் 12 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் இருந்தன.

**மா. துரைநாயகம்**

அதில் பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், கல்முனை, சம்மாந்துறை ஆகிய ஏழு தமிழ்பேசும் உதவி அரச அதிபர் பிரிவுகளும் வேவகம்பத்து வடக்கு, வேவகம்பத்து தெற்கு, லாகுகல, மகாஓயா, பதியதலாவ ஆகிய ஐந்து சிங்களம்பேசும் உதவி அரச அதிபர் பிரிவுகளும் இருந்தன. தற்போது சிங்கள உதவி அரச அதிபர் பிரிவுகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மகாவலி திட்டத்தின் 'சி' வலயம் அம்பாறை மாவட்டத்திற்குள் வருகிறது. அதைத் தொடர்ந்து 1981-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை வெளிமாவட்டங்களிலிருந்து 10 000 சிங்களக்குடும்பங்களை மேற்படி மாவட்டத்தினுள் குடியேற்றியுள்ளார்கள். அம்பாறை மாவட்டத்தின் இனவிகித சாரத்தை மேற்படி குடியேற்றங்கள் மேலும் மாற்றமடையச்செய்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கிராமங்களையாவும் தற்போது அழிக்கப்பட்ட நிலையிலுள்ளன, தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் அகதிகளாக காடுகளில் தஞ்சமடைந்திருக்கிறார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழின அழிப்பு வேலை தொடர்ந்தும் சிறிலங்கா அரசால் செய்யப்பட்டுவருகிறது.

பட்டிப்பளை மண்ணில் கடந்த 42 வருடகாலத்துள் நடத்தப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்ற பேராதிக்கத்தையும் அதனால் விளைந்த தமிழினப் பேரழிவுகளையும் இன்று காண்கிறோம்.

## குகன்ஒருவரலாற்றுநாயகன்

மாவீரன் நெப்போலியனை திவர் போவாரோ? வேவ்ர் வெற்றிகண்டவன் மாவீரன் நெல்சன். நெல்சனைப் பற்றி எழுதும் போது பிரித்தானியாவின் தலைசிறந்தவர் எவரோ? என்ற கேட்டவை நெஞ்சில் நிமிர்ந்து நிற்கிறது. குகன் ஒருவரலாற்று நாய

(விடுதலைப் புலிகள் மத்திய குழு உறுப்பினர் லெப் கேர்ணல் பொன்னம்மானின் (குகன்) நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது. (ஆ-ர்)



லாற்று விற்பன்னர்கூறியவை நான் மனத்திரையில் ஓடுகிறது. தீரன் குகனை நினைக்கும்போது. "ஈற்றன் உயர் நிலைப்பள்ளியின் விளையாட்டு மைதானத்திலே தான் வாட்டலோ போர் முதல் வெல்லப்பட்டது" என்றான் வரலாற்று வல்லுனன். ஒரு சிலர் வீராகிப்படுகின்றார்கள் மிக சிலரே வீராகவே பிறக்கின்றனர். சிறைபிடிக்க முடியாதது இந்த ஒன்றுதானே? என் சிந்தனை கம்பன் காட்டும் போர்த்தலைவன் குகனிடம் செல்கிறது "ஆறாடர்கள். உலகம் வியக்க வாழ வேண்டும். மக்கள் போற்ற அவர் உள்ளங்களை ஆளவேண்டும். இதுவே ஒரு தீரனின் வாழ்வின் இலட்சியம். இவ் இலட்சியத்தை பள்ளிப்பருவத்திலிருந்தே கைக்கொண்ட ஒரு வீரனைப் பற்றிச்சிந்திப்பதும், எழுதுவதும் உவப்பான தொன்றாகும்.

### இனத்தின் மீது தீராத பாசம்

பிறந்த நாள் ஒரு வரலாற்று மானிடனின் வாழ்வில்முக்கியமன்று: வாழ்வு நிகழ்வுகள் மனிதனை ஆக்குகின்றன. அறியாப்பருவத்தே 58லகளில் எதிர்கொண்ட அனுபவங்கள் அஹிம்சாமூர்த்தியாக வாழ்ந்த தந்தை அக்கிரமக்காரர்களால் அடைந்த இன்னல்கள், குழந்தை குகனை மண்ணின் மேலும் இனத்தின் பாலும் தீராத உறைப்பானபாசத்தை வளர்த்ததில் வியப்பில்லை.

### விளையாட்டுத் துறையில்

யாழ். இந்துக்கல்லூரி பண்பான பலவித படைப்புக்

க. சிவராமலிங்கம்
(முன்னாள் பதில் அதிபர், யாழ். இந்து கல்லூரி)

களை நடத்துகிறது; நடத்திக்கொண்டிருக்கிறது. கல்லூரியின் விளையாட்டரங்கு இப்படைப்பில் கொண்ட பங்கு கொஞ்சநஞ்சமல்ல 1972 ல் 16 வயதுக்குட் பட்டோர் கிரிக்கெட்குழுவில் நுழைந்த குகன், 1974-ல் 19 வயதுக்குட் பட்டோர் குழுவில் சாதனைகள் பலபுரிந்து 1975-ல் சிறந்த துடுப்பு வீரனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டு பதக்கம் பெற்று 1976-ல் குழு முதல்வனாக உயர்ந்து சரித்திரம் படைத்தவன் இதே ஆண்டில் புனித பரியோவான் கல்லூரியோடு ஆடிய ஆட்டத்தில் வியக்கத்தக்க சாதனைகள் புரிந்ததோடு அமையாது, உள்ளக் கிளர்ச்சிமிக்க பிரகடனம் ஒன்றை விடுத்து வெகுசனப் பாராட்டைப் பெற்றமையை 'டெயிலிமிரர்' தலையங்கம் கொடுத்து விளக்கியதென்றால், இவன் புகழ்பாட வேறுசான்றும் வேண்டுமா?

### மெய்வல்லுநர் போட்டியிலும்

கிரிக்கட் மட்டும்தான் இவன் சாதனையன்று; மெய்வல்லுனர் போட்டிகளிலும் சதுரங்கத்திலும் தன் பெயர் நிறுவியதும் இங்கு நினைவு கூரப்படவேண்டியதே.

**'வெளிநாடு சென்று**

**உயர்கல்வியை**

**தொடர வாய்ப்புகள்**

**வந்த காலத்திலும்மண்ணை**

**விட்டு போகேன்**

**மண்வளம் கண்டு**

**நெல்வளம் பெருக்கு**

**வேன்' என்று குரல்**

**கொடுத்து மண்ணின்**

**பற்றை எடுத்துக்காட்டினர்'**

வெளிநாடு சென்று உயர்கல்வியைத் தொடர வாய்ப்புகள் வந்தகாலத்தும் மண்ணை விட்டுப்போகேன். மண்வளம் கண்டு நெல்வளம் பெருக்குவேன். "ஈழத்துணவை" மீண்டும் பிறநாட்டுத் துறைமுகங்களில் இறக்குவிப்பேன் என்று குரல் கொடுத்து தேசமறுத்து மண்ணின் பற்றை எடுத்துக்காட்டினன்.

இனப்பற்று என்பது மற்றும் இனங்களை வெறுப்பதென்பதல்ல. மாறாகப் பிற இனங்களோடு ஒத்து வளர்தலே. இந்த நிலைப்பாட்டிற்கு எதிர்ப்புத் தோன்றினால் எதிர்ப்பை வெற்றிகொள்வது மனித உரிமை. இதை நாகரிகம் படைத்தவை என்று கூறிக்கொள்ளும் சிலர் மறுப்பது தான் விந்தையிலும் விந்தை. "வாழ் வாழவிடு" என்பது மனித சிந்தனையின் பண்பான முடிவு.

மண்ணின் மீட்சிக்கும் இனத்தின் விடுதலைக்கும் பாடுபடுவது குற்றமானால் முதலாவது குற்றக்கூண்டில்

(4ம் பக்கம் பார்க்க)

# போராட்ட காலத்தில் மாணவர் பங்கு அவசியம்

(யாழ்ப்பாணம்)

''போராட்ட காலங்களில் மாணவர் தங்களின் முழுமையான பங்களிப்பை அளிக்க முன்வரவேண்டும்''

இவ்வாறு நேற்று சுண்டிக்குழி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணிச் செயலாளர் திரு. யோகரட்ணம் (யோகி) கூறினார்.

மன்னார், திருமலை, மட்டு நகர்ப் பகுதிகளில் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இன்றைய போராட்டக் காலங்களிலும், வடமாகாணத்தில் பாடசாலைகளும், கல்லூரிகளும், விடுதலைப் புலிகளின் தியாகங்களால் சிறப்பாக இயங்கி வருகின்றன.

மாணவர்கள் வெளிநாடு செல்வதையும், கொழும்பு போன்ற இடங்களுக்குச் செல்வதையும் தவிர்த்து தங்களின் பங்களிப்பை முழுமையாக வழங்கினால், நாம் மிக விரைவில் விடுதலையைப் பெற்றுவிடுவோம்'' என்றும் திரு. யோகி மேலும் கூறினார்.

மாணவிகளின் பல்வேறு விதமான கேள்விகளுக்கும் திரு. யோகி பதில் அளித்தார். (வி)

## காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையைச் சேர்ந்த அன்ரன் அமலதாஸ் (வயது 8), அன்ரன் யூட் (வயது 4 ஆகிய இரண்டு சிறுவர்களும் செவ்வாய்க்கிழமையில் இருந்து காணமற்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

## குகன் ஒரு

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நிறுத்தப்படவேண்டியவர் உலகம் தலைவணங்கும் காந்தியடிகளே.

இன்மைக் காலநிகழ்வுகள் மொழி, இன பண் பாசம் கொண்ட இளைஞர்களை வெகுண்டெழச் செய்த தென்றால் அது வரலாற்று நியதி உலகப்பெரு வரலாற்று ஏடுகளில் இப்படி நிறையக் காணலாம். இந்த வரலாற்று மாமனிதர்களில் ஒருவரும் அமரன் குகன் மறைந்துவிட்ட நாள் 1987 பெப்ரவரி 14 ஆகும் வீரனது வாழ்க்கை இரத்தத்தில் எழுதப்பட்டு ரணத்தில் முற்றுப்பெற்று வீர சொர்க்கத்தில் அமரத்துவம் அடையும் ஒரு மகாகாவியம் குகன் ஒரு 'மகா காவியம்' தமிழர் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் காவியம்.

வாழ்க அந் நினைவு. வெல்க அறம்; ஓங்குக தமிழ் மண்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number 8/100306/91

## 20 பொதுமக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் 50 பேர்வரை காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களின் சடலங்களோ, காயமடைந்தவர்களையோ அங்கிருந்து கொண்டுவர முடியாத நிலையிலுள்ளதாகவும் அங்கிருந்து வந்த பலர் தெரிவித்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் அருகிலுள்ள காடுகளுக்குள் அகதிகளாகத் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## பின்வாங்கிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளவுக்கு விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுவருகின்றது.

இதேவேளை விமானங்கள், ஹெலிகளின் பலத்த தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் விளைவாக பல கட்டிடங்கள், பாடசாலைகள், கோவில்கள் என் பலத்த சேதமடைந்தன. (23)

பரீட்சைக்கு

## விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் நடாத்தப்படும் 11-ம் ஆண்டு சைவ சமயபாடப் பரீட்சை மார்ச் மாதம் 17-ம் திகதி நடைபெறவுள்ளதால் இதில் தோற்றவுள்ள மாணவர்களை இம் மாதம் 28ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (பூ)

## 16ந் திகதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குமாறு சில எதிர்க்கட்சிகள் கோரியுள்ளன.

16ம் திகதி சனிக்கிழமை ஜனாதிபதி கூட்டவுள்ள அனைத்துக் கட்சி மாநாட்டில் இந்த ஆலோசனை முன்வைக்கப்படுமென ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் இனப்பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதி சில முக்கிய முடிவுகளை மேற்கொள்வாரென அதிகாரிகள் கூறியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (சி)

## வீரவணக்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கமல்ராஜ், மேஜர் ஜோன்சன் ஆகியோர் வீர மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இவர்களுக்குத் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (க-வி)

## 400 தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அனைவரும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

பட்டக்களப்புப் பகுதிக்கு ஜனாதிபதி திரு பிரேமதாஸா அடுத்த சில தினங்களில் விஜயம் செய்யவுள்ளதையடுத்தே தமிழ் பொதுமக்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகுறது. (வி)

## 35 இராணுவத்தினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத்தினர் கொல்லப்பட்டு, 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

வவனியாவிலிருந்து முன்னேறிய இராணுவம் புலிகளின் மிகக் கடும் எதிர்த்தாக்குதலால் திக்குமுக்காடிப்போய் நொச்சிமோட்டையில் நிற்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. [சி]

## பாக்தாத் மீது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவில் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இக்கொடூரத் தாக்குதலை முஸ்லிம் நாடுகள் உட்படப் பல நாடுகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இதேவேளை பாக்தாதில் பயணிகள் வந்த வாகனம் மீது பன்னாட்டுப் படைகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் 40 பொதுமக்கள் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர். (க)

## 48 மணிநேரத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது. புலிகளால் பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அம்பாறையில் பொலிஸார் மீது நடைபெற்ற தாக்குதலில் இன்ஸ்பெக்டர் உட்பட நால்வர் ஸ்தலத்திலேயே பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்தார். இவர்களிடமிருந்து பெருமளவு பலரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் புல்மோட்டை, முல்லைத்தீவு, ஆனையிறவு, மன்னார், சிலாவத்துறைப் பகுதிகளில் புலிகள் மேற்கொண்ட பல தாக்குதல்களில் 16 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், 13 பேர் படுகாயம் அடைந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. இத்தாக்குதலில் கவச வாகனமும், ஒரு ஜீப் வண்டியும் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளன. (க-சி)

# 15ம் திகதி முதலாம் கட்ட இலவச உணவு

(யாழ்ப்பாணம்)

1991ம் ஆண்டுக்கான முதலாம் கட்ட இலவச உலர் உணவு இம்மாதம் 15ந் திகதியிலிருந்து வழங்கப்படவுள்ளது.

இம்முறை அரிசி கூடுதலாக வழங்கப்பட உள்ளது. அத்துடன் கோதுமை மாவின் விலையும் இம்முறை குறைக்கப்பட்டுள்ளது. முன்னர் ஒரு கிலோ கோதுமை மா மா 14 ரூபா 25 சதத்துக்கு வழங்கப்பட்டது. இம்முறை ஒரு கிலோ மா 12 ரூபா 25 சதத்திற்கு வழங்கப்பட உள்ளது.

அரிசி, மா, சீனி பருப்பு, பால்மா, மண்ணெண்ணை, உழுந்து ஆகிய பொருள்கள் வழங்கப்பட உள்ளன. (153)

# $16\frac{1}{2}$ கோடி ரூபா மாதாந்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசுத் திணைக்களங்களுக்கும், கூட்டுத்தாபனங்களுக்கும் சம்பளம் வழங்குவதற்கும் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதற்கும் மாதாந்தம் $16\frac{1}{2}$ கோடி ரூபா திரவப் பணமாகத் தேவைப்படுகிறது.

மாதாந்தம் 5 கோடி ரூபா பணத்தை மட்டுமே அரசு யாழ்ப்பாணத்திற்கு அனுப்புகிறது.

மாதாந்தம் கூடுதலாகப் பணத்தைத் தருமாறு யாழ் அரச அதிபர் கொழும்புக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (153)

# 11 லொறிகள் வடக்கே வந்தன

(பூநகரி)

வவுனியாவில் ஏற்பட்ட மோதல் காரணமாக வவுனியா இராணுவ தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்ட லொறிகள் நேற்றுக் காலை யாழ். மாவட்டம் வருவதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

இதையடுத்து மாங்குளம் ஊடாக பரந்தன் வீதிவழியாக 11 லொறிகள் பூநகரி வந்தடைந்துள்ளன. லொறி சாரதிகளும், கிளினர்களும் படுமோசமாக தாக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

வவுனியாக்கு அப்பால் பல லொறிகள் வடபகுதிவரா நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [23]

## மேஜர் ஜோன்சன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவத்தினருடன் நேற்று நடைபெற்ற கடும் மோதலில் மேஜர் ஜோன்ஸன் வீரமரணமடைந்தார்.

மேஜர் ஜோன்ஸன் 1984 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுடன் முழுமையாக இணைந்து கொண்டு திருமலையில் செயற்பட்டு வந்தார் 86-ம் ஆண்டு தொடக்கம் வன்னிப் பகுதியில் செயற்பட்ட இவர் பின்பு அம்பில் செம்மலைப் பகுதியில் அரசியல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இந்தியப் படையுடன் வன்னிப் பகுதியில் நடைபெற்ற பலமோதல்களில்பங்குகொண்டதுடன், கொக்காவில், மாங்குளம் இராணுவ முகாம்களின் தகர்ப்பின் போது முக்கிய பங்கு வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காட்டு வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது (வி)

## தவறவிடப்பட்ட பொருட்கள்

(பூநகரி)

வவுனியாவில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையே இடம்பெற்ற மோதலையடுத்து மினிபஸ்களில் தமது பொருட்களைத் தவறவிட்ட கொழும்பு பயணிகளின் பொருட்கள் பாதுகாப்பாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பொருட்களின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பூநகரி மினிபஸ் நேரக்கணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். (23)

## வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மன்னார் வீதியில் நெடுங்குளம் பகுதிக்குச் சென்றுள்ளனர். அங்கு அவர்கள் மீது கடும் தாக்குதல் நடைபெற்றுவருகிறது.

முல்லைத்தீவிலும் இராணும் மும்முனைத் தாக்குதலை நடாத்திவருகிறது. எனினும் புலிகளின் எதிர்த்தாக்குதலில் இராணுவம் பெரும் இழப்பைச் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படும். (வி)